பொது நிர்வாக சுற்றுநிருப இலக்கம் : 02/2002

எனது இல: 1/சீஈ/02-6
பொது நிர்வாக,முகாமைத்துவ,
மற்றும் சீர்திருத்த அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு.07
2002.06.12

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
மாகாண சபைகளின் கீழ் உள்ள அரச நிறுவனத் தலைவர்களுக்கும்,
கூட்டுத்தாபனங்கள்,நியதிச்சட்டமுறையான சபைகள், அரச-தனியார் கம்பனிகள்
என்பவற்றின் தலைவர்களுக்கும்.

**அரச,அரச சார்புத்துறை ஊழியர்களின் தொகைமதிப்பு-2002**

அடுத்த அரச,அரச சார்புத்துறை ஊழியர்களின் தொகைமதிப்பை 2002 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 1 ஆம் திகதி நடாத்த தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் ஒழுங்குகளைச் செய்துள்ளது. தொகைமதிப்புகளின்தொடர்ச்சியில் இது ஒன்பதாவது தொகைமதிப்பாகும்.

2. இத் தொகைமதிப்பு அமைச்சுக்கள்,திணைக்களங்கள்,நியதிச் சட்டமுறையான சபைகள், கூட்டுத்தாபனங்கள், மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ள அரச தனியார் கம்பனிகள், மாகாண அமைச்சின் கீழ் உள்ள (உள்ளூராட்சி அதிகார சபைகள் உட்பட)சகல அரச நிறுவனங்களையும் சார்ந்த சகல (நிரந்தர, தற்காலிக,அமைய,ஒப்பந்த அடிப்படையில் தொழிலிற்கு அமர்த்தப்பட்டவர்கள்) ஊழியர்களையும் உள்ளடக்குகிறது. உரிய தகவல்கள் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரால் நிரப்பப்பட்டு அனுப்பப்பட வேண்டும்.

3. சம்பந்தப்பட்ட அமைச்சு, மாகாண சபை இணைப்பு உத்தியோகத்தர்கள் மூலம் தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் படிவங்கள் விநியோகிக்கப்படும்.

பின்வருவன அவசியமானவை

- உங்கள் நிறுவனத்தைச் சார்ந்த சகல ஊழியர்களுக்கும் படிவங்கள் விநியோகிக்கப்பட்டதை உறுதிப்படுத்தல்.
- ஊழியர்களிடமிருந்து நிரப்பப்பட்ட படிவங்களை மீளப்பெறுதல்
- திட்ப நுட்பம்,பூரணத்துவம்,உள்ளடக்கம் என்பவற்றைச் சீர்பார்த்தல்
- 2002 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 15 ஆம் திகதியளவில் பூரணப்படுத்தப்பட்ட படிவங்களை தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திற்கு அனுப்புதல்.

4. தொகைமதிப்புத் திட்டம் மூலம் திரட்டப்பட்ட தகவல்கள் அரசாங்கத்திற்கும் நாட்டிற்கும் கணிசமான உதவியாக இருக்கும். எனவே இவ்வேலையை சீராக நடாத்தவும், உங்கள் நிறுவனத்தைச் சார்ந்த சகல ஊழியர்களையும் முழுமையாக கணக்கிடவும் அவர்கள் சகலரிடமிருந்து நிரப்பப்பட்ட படிவங்களை மீளப்பெறவும் வேண்டிய ஒழுங்குகளைச் செய்யும்படி உங்களை மனப்பூர்வமாக வேண்டுகிறேன்.

ஒப்பம்: டிட்டா விமலசிறி
செயலாளர்,
பொது நிர்வாக, முகாமைத்துவ,
மற்றும் சீர்திருத்த அமைச்சு